# கழகத் தலைவர் அறிவித்த ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கைக்கு செல்லுமிடமெல்லாம் மக்களின் எழுச்சிமிக்க வரவேற்பு உற்சாகம் தருகிறது!

## திருப்போரூரில் நடைபெற்ற திருமணவிழாவில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**திருப்போரூர், ஜூலை 9 – சென்னை – திருப்போரூர் பேரூர் கழகச் செயலாளர் – பேரூராட்சி மன்றத் தலைவர் தேவராஜ்–செல்வி தம்பதியின் மகன் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் செங்குட்டுவன் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மதிவாணன் – கீதா தம்பதியின் மகள் பிரித்தீகா ஆகியோரின் திருமணத்தை கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின்திருப்போரூரில் நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி சிறப்புரை ஆற்றினார்.**

கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:

திருப்போரூர் பேரூர் கழகச் செயலாளர், பேரூராட்சித் தலைவர் அண்ணன் தேவராஜ் - செல்வி தேவராஜ் ஆகியோரின் அன்புமகன் செங்குட்டுவன் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் மதிவாணன்-கீதா தம்பதியினரின் அன்புமகள் பிரித்திகா இணையரின் திருமணத்தை உங்கள் முன்பு நடத்தி வைப்பதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் சார்பாக மணமக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சிறப்பான வாய்ப்பை எனக்கு அளித்து, மிகச்சிறப்பான வரவேற்பை அளித்த அமைச்சரும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான அண்ணன் தா.மோ.அன்பரசன் அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கழகப் பணி- மக்கள் பணி!**

அண்ணன் தேவராஜ் அவர்கள் வார்டு செயற்குழு உறுப்பினர், ஒன்றியப் பிரதிநிதி, பேரூர் துணைச் செயலாளர், ஒன்றியத் துணைச் செயலாளர், மாவட்டக் கழகப் பிரதிநிதி என்று பல்வேறு நிலைகளில் கழகத்திற்காகப் பணியாற்றி, உழைத்து இப்போது தொடர்ந்து இரண்டாவது முறையாக பேரூர் கழகச் செயலாளராக கழகப் பணியையும், மக்கள் பணியையும் ஆற்றி வருகிறார்.

2006 ஆம் ஆண்டு முதல் 2011-ஆம் ஆண்டு வரை அண்ணனின் துணைவியார் செல்வி அவர்கள் திருப்போரூர் பேரூராட்சி மன்றத் தலைவராகவும் மக்கள் பணியாற்றி இருக்கிறார். இப்போது அண்ணன் அவர்கள் பேரூராட்சித் தலைவராகச் செயல்பட்டு வருகிறார்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு, கழகத்திற்காக 5 முறை சிறை சென்றவர்தான் அண்ணன் அவர்கள். இன்னும் சொல்லப்போனால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட போது, அதை எதிர்த்துப் போராடியதற்காக, கலைஞர் இருந்த அதே மத்திய சிறையில் அடைக்கப்பட்டவர்தான் அண்ணன் தேவராஜ் அவர்கள்.

**பாராட்டு - வாழ்த்து**

அண்ணன் வழியில் அவரின் மகன் தம்பி செங்குட்டுவன் அவர்களும் இன்றைக்கு கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு கழகப்பணியை ஆற்றி வருகிறார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் மணமகனுக்கு `செங்குட்டுவன்’ என்று பெயர் சூட்டியவர். அந்தப் பெருமைக்குரியவர் நம் மணமகன் அவர்கள். காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட, பொறியாளர் அணி அமைப்பாளராக சிறப்பாகச் செயல்பட்டு வருகிற தம்பி செங்குட்டுவனுக்கு இந்த நேரத்தில் என் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் காலத்தில் திருமணங்களைப் பார்த்தீர்கள் என்றால், பலரும் சொல்வது சரியான பெண் கிடைக்கவில்லை, சரியான மாப்பிள்ளை கிடைக்கவில்லை என்று நிறைய திருமண தகவல் மையங்கள் வந்துவிட்டன. அதை நோக்கித்தான் இன்றைக்கு மணமக்களின் பெற்றோர்கள் சென்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

நம் கழகத்தினர் இந்த சிரமத்தைத் தவிர்க்க, அண்ணன் தேவராஜ் அவர்களின் வழியில் நாம் அத்தனை பேரும் பின்பற்றலாம். அண்ணன் தேவராஜ் அவர்களை பொறுத்தவரைக்கும் தன் பிள்ளைகளுக்கு கழகத் திருமணங்களிலேயே திருமணம் செய்து வைத்து விடுகிறார்.

**கூடுதல் பெருமை**

அண்ணன் தேவராஜ் தன் மகளை கழக பொதுக்குழு உறுப்பினர் அண்ணன் செங்குன்றம் பரந்தாமன் அவர்களின் மகனுக்கு மணம் முடித்து கொடுத்து இருக்கிறார். அந்த திருமணத்தையும் நான்தான் நடத்தி வைத்தேன். இன்றைக்கு இந்த திருமணத்தையும் நான்தான் நடத்தி வைக்கிறேன். அதில் எனக்கு கூடுதல் பெருமை.

இன்றைக்கு மகனுக்கு கழகக் குடும்பத்தைச் சேர்ந்த அண்ணன் மதிவாணன் அவர்களின் வீட்டில் பெண் எடுத்து இருக்கிறார். இந்தத் திருமணத்தை நான் நடத்தி வைக்கின்ற பெருமையைப் பெற்று இருக்கிறேன். இப்படிக் கழக குடும்பங்களுக்குள் சம்பந்தம் செய்யும்போது உங்களின் குடும்பங்களும் வலுப்பெறும். அதோடு சேர்ந்து நம் இயக்கமும், கழகமும் வலுப்பெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இங்கு மணமகளின் தந்தை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் மதிவாணன் பற்றியும் சொல்லியாக வேண்டும். ஏனென்றால், அவர் எங்களின் இளைஞர் அணியில் இருந்து வந்தவர். அண்ணன் அன்பரசன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார். அண்ணன் அவர்கள் மாவட்ட அமைப்பாளராக இருக்கும் போது அண்ணன் மதிவாணன் அவர்கள் இளைஞர் அணியின் மாவட்டத் துணை அமைப்பாளராக சிறப்பாகச் செயல்பட்டவர் தான் அண்ணன் மதிவாணன் அவர்கள்.

1996-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் சட்டமன்ற உறுப்பினராக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர் அண்ணன் மதிவாணன் அவர்கள். இப்படிப்பட்ட சிறப்புவாய்ந்த நம் கழகத்தின் குடும்ப விழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கு பேசும்போது சொன்னார்கள். இந்தத் திருமண விழாவிற்கு அனைவரும் மகிழ்ச்சியாக வந்து இருக்கிறீர்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், நிறைய மகளிர் சிரித்த முகத்துடன், மணமக்களை வாழ்த்துவதற்காக வந்து இருக்கிறீர்கள்.

**மக்களின் எழுச்சி**

நம் தலைவர் அவர்கள் நான்கு நாட்களுக்கு முன்பு அறிவித்தார். இன்னும் 9 மாதங்களில் 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் வர இருக்கிறது. நிச்சயமாக மக்களின் எழுச்சியைப் பார்க்கும்போது மீண்டும் நம் தலைவர் அவர்கள்தான் முதலமைச்சராக தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்படப் போகிறார் என்பது உறுதியாகத் தெரிகிறது.

ஏனென்றால், `ஓரணியில் தமிழ்நாடு’ என்ற முன்னெடுப்பை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு வீடாகச் சென்று தலைவர் அவர்கள் உறுப்பினர்களைச் சேர்க்கச் சொல்லி இருக்கிறார்கள். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் குறைந்தது 30 சதவிகித வாக்காளர்களை கழகத்தின் உறுப்பினர்களாகச் சேர்க்கச் சொல்லி இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், தலைவர் அவர்களே ஒவ்வொரு வீடாகச் சென்று அவர்களின் குறைகளைக் கேட்டு, அவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து இருக்கிறார். நான் என்னுடைய தொகுதி சேப்பாக்கம்-திருவல்லிக்கேணியில் சேர்த்துக்கொண்டு இருக்கிறேன்.

வாகனத்தில் வரும்போது அண்ணன் அன்பரசன் என்னிடம் சொன்னார். எப்படி இருக்கிறது வரவேற்பு. எப்படி இருக்கிறது மக்களிடம் எழுச்சி. சிரித்த முகத்துடன் வரவேற்கிறார்கள் என்றுச் சொன்னார். அண்ணன் இ.க (இ.கருணாநிதி) அவர்கள் பேசும்போதும் சொன்னார் தலைவரே தினமும் அலைபேசியில் வந்து கேட்கிறார். பொதுமக்களின் ஒத்துழைப்பு எப்படி இருக்கிறது, என்று கேட்கிறார். மிகச் சிறப்பாக, எழுச்சியாக இருக்கிறது. தலைவர் அவர்கள் இந்த நான்கு வருடங்களில் எத்தனையோ திட்டங்களை சிறப்பாக செய்து இருக்கிறார்.

நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது எல்லாம் அடுத்து வருகின்ற 8 மாதங்களில் அரசின் சாதனைகளை, மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கு அனைவரும் வாழ்த்தும் போது, `மணமக்கள், தந்தை பெரியாரும் - சுயமரியாதையும் போல, பேரறிஞர் அண்ணாவும் - தமிழும் போல, முத்தமிழறிஞர் கலைஞரும் - இயக்கமும் போல, தலைவரும் - நம் திராவிட மாடல் அரசும் போல மணமக்கள் வாழ வேண்டும் என்று வாழ்த்தினார்கள்.

நான் மணமக்களிடம் சொல்லிக் கொள்வது எல்லாம் ஒன்றே, ஒன்றுதான். நல்ல நண்பர்களாக ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

நம் தலைவர் அவர்கள் எந்தத் திருமணத்திற்குச் சென்றாலும், ஒரேயொரு கோரிக்கை வைப்பார். மணமக்கள் தங்களுக்கு பிறக்கின்ற குழந்தை ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி அழகான ஒரு தமிழ்ப் பெயரை சூட்ட வேண்டும் என்றுக் கூறிக்கொண்டு, இந்த சிறப்பான வாய்ப்பை அளித்த அண்ணன் அன்பரசன் அவர்களுக்கும், மணமக்களுக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இதயவர்மன், மாமல்லபுரம் விஸ்வநாதன், அன்புச் செழியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை மனோகரன், துணை மேயர் காமராஜ், தமிழ்மாறன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வன்னியரசு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சத்யபிரபு, தையூர் விஜயகுமார், கமலக்கண்ணன், மணிகண்டன், ஜானகிராமன், ராஜேஷ், இன்சமாம் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.7.2025) திருப்போரூரில், பேரூர் கழக செயலாளர் பேரூராட்சி மன்றத் தலைவர் மு. தேவராஜ் செல்வி தம்பதியின் மகன் தே.செங்குட்டுவன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செ.மதிவாணன் கீதா தம்பதியின் மகள் ம.பிரித்திகா இணையரின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமிமதுசூதனன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், மாவட்ட பொருளாளர் செ.விசுவநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் படப்பை ஆ.மனோகரன், துணை மேயர் கோ.காமராஜ், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வன்னியரசு, தி.மு.க.மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாநகர இளைஞரணி அமைப்பாளர் சத்தியபிரபு உள்பட தி.மு.கழக நிர்வாகிகள், மணமக்கள் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

---

### “கல்லூரிப் பேராசிரியர்கள் நியமனம் மற்றும் முதல்வர்கள் பதவி உயர்வு!

## அரசு முறையான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது!

### உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பதில்!

*சென்னை, ஜூலை 9 -*

*அரசு கல்லூரிகளில் முதல்வர்கள் மற்றும் பேராசிரியர்கள் காலிப்பணியிடங்கள் குறித்து சமீபத்தில் நாளேடுகளில் வரப்பெற்றுள்ள செய்திகள், இது குறித்து அமைச்சர் கோவி. செழியன் அளித் துள்ள விளக்கம் வருமாறு:-*

*தமிழ்நாட்டில் மொத்தம் 180 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இந்த கல்வியாண்டில் மட்டும் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி கல்லூரிகளே இல்லாத பகுதிகளில் புதியதாக 15 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. அனுமதிக்கப்பட்ட கல்லூரி பேராசிரியர்கள் பணியிடங்கள் குறித்தும் நிரப்பபட்ட முதல்வர்கள் குறித்தும் முற்றிலும் தவறான செய்திகள் வெளியிடப்பட்டுள்ளது. உதாரணமாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1,500 பேராசிரியர்கள் மட்டுமே உள்ளனர் என செய்தி வரப்பெற்றுள்ளது. ஆனால், உண்மையில் 4,711 பேராசிரியர்கள் நிரந்தரமாக பணியாற்றி வருகின்றனர். 9,000 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளது என தெரிவித்துள்ளதும் தவறானதாகும். காலிப்பணியிடங்களில் கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு மாணவர்களின் கல்வி பாதிக்காமல் இருக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*



*காலிப்பணியிடங்கள் ஏற்பட்டதன் பின்னணி பின்வருமாறு:-*

*2015ஆம் ஆண்டிற்கு பிறகு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பபடாத தால் இந்த காலிப்பணியிடங்கள் ஏற்பட்டுள்ளன. இதனை சரிசெய்ய இவ்வரசு பொறுப்பேற்றவுடன் 4,000 ஆசிரியர் பணியிடங்களை அரசு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பிட ஆணை வெளியிடப்பட்டது. பல்வேறு நிலையில் இதன்மீது 54 வழக்குகள் தொடரப்பட்டதால் நாளதுவரை மேற்படி பணியிடங்கள் நிரப்பிட காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. வழக்குகளை விரைவில் முடித்து மேற்படி காலிப்பணியிடங்களை நிரப்பிட உரிய சட்டபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*பல்வேறு வழக்குகளால் நிரந்தர உதவிப் பேராசிரியர்களை தேர்வு செய்ய காலதாமதம் ஆகும் நிலையிலும், மாணவர்களின் கல்வி நலன் கருதி கௌரவ விரிவுரையாளர்கள் காலிப் பணியிடங்களில் நிரப்பப்பட்டு, கல்வி பணியாற்றி வருகின்றனர். மேலும், தற்போது சுமார் 800 பணியிடங்களில் கௌரவ விரிவுரையாளர்களை நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் மாணவர்களுக்கு உயர்கல்விச் சேவை எந்த வகையிலும் தமிழ்நாட்டில் பாதிக்கப்படவில்லை.*

**கல்லூரி முதல்வர்கள் நிலை குறித்து:**

*உயர்கல்வித் துறையின் கீழ் செயல்படும் 58 நிலைI அரசு கல்லூரிகளில் 46 நிரந்தர முதல்வர்கள் பணியாற்றி வருகின்றனர். இதில் காலியாக உள்ள 12 முதல்வர் பணியிடங்களில், ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட பட்டியல் (APPROVED PANEL) மற்றும் அடுத்து தெரிவு செய்யப்பட உள்ள பட்டியலிலிருந்து முதல்வர்களை பதவி உயர்வு மூலம் நிரப்பிட நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.*

*1998ஆம் ஆண்டு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்டவர்களின் பணிமூப்புப் பட்டியல் 2023இல் வெளியிடப்பட்டது. அப்பணிமூப்புப் பட்டியலை ஏற்றுக்கொள்ளாமல் ஆசிரியர்கள் வழக்கு (WP எண் 20170/2023) தொடுத்து தடையாணை பெற்றுள்ளனர். இதன் காரணமாக கல்லூரி முதல்வர்கள் பதவி உயர்வு வழங்குவதில் அரசுக்கு தாமதமாகி உள்ளது.*

*இவ்வழக்கில் எதிர்உறுதி ஆவணம் உடனடியாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் மீதான இறுதி ஆணை இதுவரை நீதிமன்றத்தால் வெளியிடவில்லை. வழக்கினை விரைந்து முடித்திட சட்டரீதியான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வழக்கு முடிவுக்கு வந்தவுடன் காலியாக உள்ள கல்லூரிகளில் முதல்வர்கள் பணியமர்த்தப்படுவார்கள். எனினும் கல்லூரியின் நிர்வாக நலன் மற்றும் மாணவர்கள் நலன் கருதி, முதல்வர் பணியிடம் காலியாக உள்ள கல்லூரிகளில் கல்லூரியின் மூத்த பேராசிரியர்கள் முதல்வர்களாக முழு கூடுதல் பொறுப்பில் நியமிக்கப்பட்டு சிறப்பாக பணியாற்றி வருகின்றனர்.*

*தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில் பரவலாக உயர்கல்வி பயிலும் வாய்ப்புகள், ஆராய்ச்சிப் படிப்புகள், புதிய முயற்சிகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலை வாய்ப்பினை உறுதி செய்தல், ‘‘நான் முதல்வன்” திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த திறன் மிகு இளைஞர்களை உருவாக்குதல் ஆகியவற்றில் தீவிரமான கவனம் செலுத்தப்பட்டு பல்வேறு சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 4 ஆண்டுகளில் 41 இலட்சம் மாணாக்கர்கள் “நான் முதல்வன்” திட்டத்தின் வாயிலாக பயன்பெற்றுள்ளனர்.*

*மேலும், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயிலப் ‘‘புதுமைப் பெண்” திட்டம் மற்றும் மாணவர்கள் உயர் கல்வி பயிலப் ‘‘தமிழ்ப் புதல்வன்” திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூ. 1,000/ உதவித்தொகை வழங்குதல், முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்குச் சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு முன்னோடி திட்டங்களையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்விச் சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது. ஒன்றிய அரசின் உயர் கல்வியில் நிதி ஓரவஞ்சனைக்கு பின்னரும் பலவித தடைகளையும் தாண்டி தமிழ்நாட்டு மாணவர்களுக்கு உயர்கல்வி சிறப்பாக வழங்கப்பட்டு வருகிறது.*

*இவ்வாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.*

---

### நாளிதழில் வெளியிடப்பட்ட செய்தி முற்றிலும் தவறானதாகும்!

## அங்கன்வாடி மையங்கள் குறைக்கப்படவில்லை! கூடுதல் மையங்கள் திறக்கப்பட்டுள்ளன!

### அமைச்சர் பெ.கீதாஜீவன் அறிக்கை!

சென்னை, ஜீலை 9 – 501 அங்கன்வாடி மையங்கள் மூடப்பட்டுள்ளன என நாளிதழ் ஒன்றில் உண்மைக்குப் புறம்பான செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அங்கன்வாடி மையங்கள் குறைக்கப் பட மாட்டாது. தமிழ்நாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளில் கூடுதலாக 44 அங்கன்வாடி மையங்கள் திறக்கப்பட்டு மொத்தம் 54,483 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன என்று சமூக நலத்துறை அமைச்சர் கீதாஜீவன் வெளியிட்டுள்ள



அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன் அளித்த மறுப்பு அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முழுவதும் அங்கன்வாடி மையங்களில் போதிய ஊழியர்கள் இல்லாததால் குழந்தைகளை அனுப்ப பெற்றோர் தயக்கம் காட்டுகின்றனர் எனவும், இந்த ஆண்டு மட்டும் 501 அங்கன்வாடி மையங்கள் மூடப்பட்டுள்ளன என 05.07.2025 அன்று நாளிதழில் வெளியிடப்பட்டுள்ள செய்தி முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும்.

அரசிற்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வண்ணம் தொடர்ந்து இதுபோன்ற உண்மைக்கு புறம்பான செய்தி பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இச்செய்தியின் அடிப்படையில் தமிழ்நாடு பா.ஜ. தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் முதலமைச்சர் பன்னீர்செல்வம், தமிழ்நாட்டில் 500 அங்கன்வாடி மையங்களை மூடுவதற்கு கண்டனத்தை தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர். அவ்வறிக்கைகள் உண்மை நிலைக்குப் புறம்பானவைகளாக உள்ளன.

**கூடுதலாக அங்கன்வாடி மையங்கள்!**

இவ்வரசு 2021-ஆம் ஆண்டு பொறுப்பேற்றபோது 54,439 அங்கன்வாடி மையங்கள் மட்டுமே தமிழகத்தில் செயல்பட்டு வந்தன. கழகத் தலைவர் தளபதியார் ஆட்சி பொறுப்பேற்ற பின்பு கடந்த நான்கு ஆண்டுகளில், மேலும் கூடுதலாக 44 அங்கன்வாடி மையங்கள் புதிதாக அனுமதிக்கப்பட்டு தற்போது 54,483 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரை, அனைத்து குழந்தைகள் மையங்களும் தற்போது வரை சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அவ்வெண்ணிக்கை ஒரு போதும் குறைக்கப்படாது. தேவைப்படின், கூடுதலாக அங்கன்வாடி மையங்கள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மாநிலத்தின் அனைத்து பகுதிகளையும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என்பதற்காக, ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட 54,483 அங்கன்வாடி மையங்கள் எண்ணிக்கைக்குள், தேவையான இடத்திற்கு குழந்தைகள் மையங்களை இடமாற்றம் செய்வதற்கு ஒன்றிய அரசு அனுமதி அளித்துள்ளது. அதனடிப்படையில்தான், அதிக நகரமய மாக்கல் காரணமாக இடம் பெயரும் மக்கள் தொகை (MIGRATION POPULATION), பயனாளிகளின் வருகை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, முதன்மை அங்கன்வாடி மையத்தினை குறு மையமாகவும், குறு மையத்தினை முதன்மை அங்கன்வாடி மையமாக மாற்றிடவும், திட்டம் சென்றடையாத புதிய பகுதிகளில், புதிய மையங்களை துவக்கிடவும், குறைவான பயனாளிகள் கொண்டு அருகருகே உள்ள இரு மையங்களை இணைத்திடவும், தூரத்தில் செயல்படும் மையங்களை பயனாளிகளின் வசிப்பிடத்திற்கு அருகிலேயே புதிதாக ஆரம்பிக்கவும், மலைப்பகுதி மற்றும் யாரும் எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளை கண்டறிந்து புதிதாக குறு மையங்களை ஆரம்பித்திடவும், கடந்த ஆறு மாதங்களாக அங்கன்வாடி மையங்கள் மறு சீரமைப்பு நடவடிக்கைக்காக (RATIONALISATION EXERCISE) புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

மேற்கூறிய யாவையும் தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் மட்டுமே உள்ளது. இந்த மறு சீரமைப்பு இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அவ்வாறு நடைமுறைப்படுத்தும் போதும் 54,483 குழந்தைகள் மையங்களை தமிழ்நாடு அரசு தொடர்ந்து நடத்தும்,

நிலைமை இவ்வாறு இருக்க, தற்போது 54,483 குழந்தைகள் மையங்கள் செயல்பட்டு வரும் தருணத்தில் புதிதாக 501 மையங்கள் மூடப்பட்டுள்ளன என்ற செய்தி உண்மைக்கு புறம்பானதாகும்.

மேலும், தற்போது 7,783 அங்கன்வாடி காலிப்பணியிடங்களை நிரப்ப அரசாணை வெளியிடப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் நேர்முகத் தேர்வு நடைபெற்று வருகின்றது. விரைவில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும்.

இவ்வாறு அமைச்சர் கீதாஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.